டிஸ் பண்ணக்கூடிய நிலைமையைத் தடுக்க முடியவில்லையென்றால் நான்-பிராக்டிசிங் அலவன்ஸ் கொடுப்பதிலே பலன் இல்லாமல் போய்விடும்.

'After the High court case is disposed of' அதைப்பற்றி முடிவு எடுக்கலாம்.

திரு. இரா. சண்முகம் : தலைவர் அவர்களே, நான்-பிராக்டிசிங் அலவன்ஸ் கொடுத்தும் தனியாக மருத்துவம் செய்கிறவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : நான்-பிராக்டிசிங் அலவன்ஸ் கொடுக்கப்படக்கூடிய மருத்துவர்களுக்கு திட்டவட்டமாக அவர்கள் பிரைவேட் பிராக்டிஸ் செய்யக்கூடாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. என்ன பிரச்சினை என்றால் சர்கம்ஸ்டான்ஷியல் எவிடன்ஸோடு தெரிவிக்கப்படுகிறபோது நடவடிக்கை எடுக்கலாம். 2, 3 நபர்கள் மீது டிபார்ட்மெண்டல் ஆக்ஷன் எடுத்துக் கொண்டிருக்கிறோம். திட்டவட்டமாக புரூப், எந்த இடத்திலே பிராக்டிஸ் செய்கிறார் என்று கிடைத்தால் நாம் ஆக்ஷன் எடுக்க முடியும்.

(முற்பகல் 9.50)

ஆனால் டிபார்ட்மெண்டல் ஆக்ஷன் இரண்டு மூன்று நபர்களின் மீது தொடர்ந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகரில் மின்சார டிராலி பஸ்கள் விடும் திட்டம்.

*வினா எண். 317—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரத்தில் மின்சார டிராலி பஸ்கள் அறிமுகப்படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) அரசு இத்திட்டத்தினைப் பற்றி பரிசீலித்து வருகிறது.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னை நகரில் ஓடுகின்ற பேருந்துகளிலும், மின்சார இரயில்களிலும் இருக்கின்ற கூட்ட நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக இந்த டிராலி பஸ்களை பரீட்சார்த்தமாக அமல்படுத்த அரசு முடிவெடுக்குமா ? குறைந்தபட்சம் பள்ளி மாணவர்களுக்காவது இந்த டிராலி பஸ்களை அமல்படுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1982 மார்ச் 2]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அந்த அடிப்படையிலேதான் அரசாங்கம் இதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்துக் கொண்டிருக்கின்ற சென்னை நகர மக்களின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க பாதாள இரயில் விடும் திட்டம் என்னவாயிற்று ? அதுபற்றி மத்திய அரசு என்ன சொல்கிறது ? அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு தொகை செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி பஸ்களைப் பற்றியது ; பாதாள இரயிலைப் பற்றியது அல்ல.

பஸ் உரிமையாளர்கள் ஸ்பேர் பஸ் வைத்துக் கொள்வதற்கான அரசு அனுமதி.

*வினா எண். 318—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஒரு பஸ் அல்லது இரண்டு பஸ் உரிமையாளர்களுக்கு ஒரு ஸ்பேர் பஸ் (Spare Bus) வைத்துக் கொள்ள அரசு அனுமதி வழங்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஒரு பஸ் அல்லது இரண்டு பஸ் உரிமையாளர்களுக்கு ஒரு ஸ்பேர் பஸ் வைத்துக் கொள்ளத் தடை ஏதும் இப்பொழுது இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பஸ் சம்பந்தமாகக் கொடுக்க வேண்டியதில், தாழ்த்தப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள் ஆகியவர்களுக்கு ஒதுக்கீடு செய்வதிலே அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று பல கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அது சம்மந்தமாக அரசு என்ன செய்திருக்கிறது? அப்படிக் கொடுக்காமல் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அது எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுக் காலமாகத் தனியாருக்கே நாம் பேருந்து உரிமங்கள் வழங்கவில்லை. அப்படி வழங்கப்பட்டிருந்தால் 18 சதவீதம் நிச்சயமாக ஒதுக்கப்பட்டிருக்கும். எனவே, வழங்கப்படாத நேரத்தில் ஏன் ஒதுக்கவில்லை என்ற கேள்வி எழாது. அப்படி வழங்கப்படும் நேரத்தில் நிச்சயமாக அவர்களுக்கும் ஒதுக்கப்படும்.